விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 புரட்டாதி 12 துல்ஹஃ 28 இதழ் 226
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28-9-1981

எம்மிடம்......
இறக்குமதி செய்யப்பட்ட

றெக்சின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சீற்
பொலித்தீன் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெறலாம்.

H.ESMAILJEE&Co
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

## லயனல், சுந்தர் நாளை சந்திப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் குறித்து நியமிக்கப்பட்ட நஷ்டஈட்டுக் குழு, பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தை நாளை செவ்வாய்க்கிழமை சந்திக்கவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் குறித்து பிரதி பொலிஸ்மா அதிபர் தலைமையிலான விசேஷ பொலிஸ் குழு விசாரணை நடாத்தியது.

நஷ்டஈட்டுக் குழுத் தலைவர் திரு. லயனல் பெர்னாண்டோ

(6-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் அகதிகள் முகாம் 30-ல் மூடப்படும்

## 223 பேர் தாயகம் திரும்புவர்

## ஏனையோர் வடக்கில் குடியேறுவர்கள்

(கொழும்பு)

**கொழும்பில் இயங்கும் [ஒரேயொரு] தமிழ் அகதிகள் முகாம் நாளை மறுதினம் புதன்கிழமை மூடப்படும். இம்முகாமிலுள்ளவர்களில் 223 பேர், அன்றையதினம் இந்தியா திரும்புவார்கள். மிகுதியானவர்கள் வவனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள்.**

அண்மையில் நிகழ்ந்த வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட இந்திய வம்சாவளி மக்கள், பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலய மடத்தில் முகாமிட அனுமதிக்கப்பட்டதும், தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக்கழகம் இவர்களுக்கு உதவிகள் வழங்கிவந்ததும், பின்னர் இவர்களை இந்தியாவுக்கு அனுப்பி வைக்க இந்தியத் தூதரகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டதும் தெரிந்ததே. சமூக சேவைப்பகுதியும் இந்த அகதிகளுக்கு பின்னர் உதவி அளித்து வந்தது.

இம்முகாமில் உள்ளவர்களில் 223 பேர் நாளை மறுதினம் இந்தியா திரும்புகின்றனர். சுமார் 50 பேர் வவனியா, கிளிநொச்சியில் குடியமர்த்தப்படுவார்கள்.

இம்முகாம் விரைவில் மூடப்படலாம் என்று இரண்டு வாரங்களுக்கு முன்னர் (இம்மாதம் 14ம் திகதி) வெளியான 'ஈழநாடு' இதழில் செய்திவந்தது குறிப்பிடத்தக்கது. (ம)

## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

## பிரயாணிகள் அதிகரிப்பு: இன்றுவிசேட கப்பல்சேவை

(மன்னார்)

வன்செயலினால் பாதிக்கப்பட்டு பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயத்தில் அகதிகளாக இருந்த தோட்டத் தொழிலாளர்களில் 208 பேர் தலைமன்னார் ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இந்தியா திரும்பினர்.

இவர்கள் கொழும்பிலிருந்து தலைமன்னாருக்கு இராணுவப் பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## பாரதி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்

### யாழ். பல்கலைக்கழகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பாரதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை "'பாரதிக்கு முன்னும் பின்னும்'' என்னும் தலைப்பில் மாதா மாதம் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வாசிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளது.

பாரதியை மையமாகக் கொண்டு, பாரதிக்கு முன்னும் பின்னும் தமிழ் இலக்கியச் செல்நெறிகள் அமைந்த முறைமைகள் பற்றிய கருத்தரங்காக இவ்வாராய்ச்சித் தொடர் அமையும். பல்கலைக்கழகத்தினரும் பிற ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் பங்கு கொள்ளத்தக்கவகையில் அக்டோபர் முதல் ஒவ்வொரு மாதத்தின் இறுதிச் சனிக்கிழமைகளில் காலை 10.00மணிக்கு பல்கலைக் கழகத்தில் நடைபெறும். முதலாவது ஆராய்ச்சிக்

(6ம் பக்கம் பார்க்க)

## உலகத் தமிழ்ச்சங்கங்களை ஒன்றிணைக்க தமிழக அரசு ஏற்பாடு

சென்னை, செப். 27

உலகத் தமிழ்ச் சங்கங்களை ஒன்றிணைப்பதற்கான இயக்கமொன்றை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளுக்காக தமிழக அரசு ஒரு கோடி ரூபா முதலீடு செய்யும் என்று தமிழ்நாடு நிதியமைச்சர் திரு நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

இந்தியாவிலும், ஏனைய நாடுகளிலுமுள்ள தமிழ்ச் சங்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டு, உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கவேண்டுமென்று ஆண்மையில் மதுரையில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டில் வலியுறுத்தப்பட்டது தெரிந்ததே. (கு)

## கம்பன் விழா இன்றைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் 4 நாட்களாக நடைபெற்றுவரும் கம்பன் விழா இன்று நடைபெறும் நிகழ்ச்சிகளுடன் முடிவடைகிறது.

இன்று காலை 9 மணிக்கு திரு மு. பொ. வீரவாகு தலைமையில் வழக்காடு மன்றம் நடைபெறவிருக்கிறது.

'கோவலன் குற்றவாளி' என தொடரப்பட்ட இவ்வழக்காடு மன்றத்துக்கு நீதிபதியாக பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் கடமையாற்றுவார்.

மாலை 5 மணிக்கு திரு. நா. சுப்பிரமணியஐயர் தலைமையில் பேராசிரியர் இராதாகிருஷ்ணன் கம்பன் தொண்டு பற்றி உரையாற்றுவார். இறுதியில் இவருக்கு கம்பன் கழகத்தினர் பாராட்டு விழாவும் நடத்தவுள்ளனர். மா

## பெருமாள் கோவில் நாளை கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அந்த மாதம் 7-ந் திகதி தேர் உற்சவமும், 8-ம் திகதி தீர்த்தோற்சவமும், 9-ம் திகதி திருக்கல்யாண உற்சவமும், 13-ம் திகதி சுமங்கலி தீபபூஜையும் நடைபெறவுள்ளது. (வெ)

## சுங்க ஏலவிற்பனை


கீழ் காணும் மோட்டார் வள்ளம் 1-10-81 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் ஊர்காவற்றுறை சுங்க அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனையின் முழு நிபந்தனைகளும் 1954-ம் ஆண்டு மே மாதம் 28-ந் திகதி வெளியிடப்பட்ட 10675-ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1-ம் பிரிவு 2ல் பிரசுரிக்கப்பட்டுள்ளன. மோட்டார் வள்ளத்தை ஊர்காவற்றுறை சுங்க அலுவலகத்தில் பார்வையிடலாம்.

1. மோட்டார் வள்ளம் ''யாகறி''

எஸ். எம். ஜே. சேனாரத்தின
உதவி சுங்க சேகரிப்பாளர்,
யாழ். மாவட்டம்.
சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

21-9-81. [1036]

த பினன்ஸ் கொம்பனி லிமிட்டெட்
உங்கள் வீட்டுப்பாவனைக்குத் தேவையான
பொருட்களைத் தவணை முறையில் வழங்குகிறது!



த பினன்ஸ் கொம்பனி லிமிட்டெட்
249C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7680

யா/சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ம. ம. வி.
வேலணை

## பரிசளிப்பு விழா

30-9-81

புதன்கிழமை பி. ப. 4-30 மணிக்கு ஆரம்பமாகும்
பிரதம விருந்தினர்:
திரு. A. K. கந்தையா B. A. (Lond) P. G. T.
அவர்கள்
(கல்லூரியின் ஆரம்பகால அதிபர்)
பரிசில் வழங்குபவர்:
திருமதி செல்வமணி கந்தையா அவர்கள்
பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள்
ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர், மாணவர்
28-9-81 1085

## ATA INDUCTION COURSE

கணக்கியல்வரி, கணக்காய்வு என்பனவற்றில் செயல் முறைப் பயிற்சியுடன் கூடிய ஆரம்ப அறிவைப் பெறுவதற்கான மூன்றுமாத வார இறுதி வகுப்புக்கள். உயர்தர கணக்கியல் நெறிகளைக்கற்க விரும்புவர்க்கும், தொழில்வாய்ப்புப்பெற முனைவோருக்கும் மிக பயனுடையது. இலவச வழிகாட்டிக்கு முத்திரையுடன் கூடிய சுயவிலாசம் எழுதப்பட்ட நீண்டகடித உறையுடன் தொடர்பு கொள்க.

DIRECTOR OF STUDIES,
TAX & ACCOUNTING SERVICES,
37, பிரப்பங்குளம் லேன்,
யாழ்ப்பாணம்.
1072

## யூனியன் கல்லூரி – தெல்லிப்பழை
## பரிசளிப்பு விழா

காலம்: 29-9-81 செவ்வாய்க்கிழமை மாலை 6-15மணி
இடம்: கல்லூரி மைதானம்
பரிசளிப்புப் பேருரை: உயர்திரு
தேவநேசன் நேசையா
அவர்கள்
யாழ். மாவட்ட அமைச்சின்,
செயலாளரும், அரசாங்க அதிபரும்
பரிசில் வழங்குநர்: திருமதி
அ. சிவஞானசுந்தரம்
அவர்கள்
பெற்றோர், பழைய மாணவர், அனுதாபிகள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
யா/யூனியன் கல்லூரி, அதிபர், ஆசிரியர்கள்,
தெல்லிப்பழை. மாணவர்கள்
1075

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ். மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: ஈடு / 1027

காரைநகர் களபூமி அ. வேலுப்பிள்ளை மகள்
நல்லம்மா — வழக்காளி

காரைநகர், களபூமி வேலுப்பிள்ளை
கணபதிப்பிள்ளை, — பதிலிடப்பட்ட வழக்காளி

எதிராக
நாகலிங்கம் சோமசுந்தரம்,
150, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
— எதிராளி.

ஈடு / 1027-ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1981-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14-ந் திகதி (14-10-81 புதன்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 7750/- மேலும் இதில் ரூபா 5000/க்கு 20-10-78 தொடக்கம் 4-10-79 வரையில் வருஷமொன்றுக்கு 18% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும் வரையில் வருஷமொன்றிற்கு 5% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 761-37½ சதமும் விற்பனைச் செலவுகளும்

### குறித்த ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிவிஷன் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை "நாயன்மார் குளத்திற்கு மேற்கு பள்ள வயல், மேட்டு வயல் நாயன்மார் குளம் தெற்கு பேட்டிவயல்" நிலப்பரப்பு 5. குளி 14 14/50ம் விடு, கிணறும் பயிர்வகைகளும், எல்லை கிழக்கு றோட்டு. வடக்கு சங்கரநாதர்கிருதனம், மேற்கு செல்லையா பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம், தெற்கு வெற்றிவேலு கந்தையாவின் ஆதனம் இடங்களும்.

ம. வீ. த கனகராஜா,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

"ஆனந்தவாசம்"
43, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1076

## கேள்வி
## அறிவித்தல்

நெடுந்தெருக்கள்
திணைக்களம்
யாழ்ப்பாணம்

பணிப் பிரிவு நிறைவேற்றுப் பொறியியலாளர் பகுதியில் உள்ள கட்டைக்காடு வலிஞ்சுனம் றோட் 3வது மைல் அடியில் நிலவேலைகள் செய்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. ரூபா 100,000/-க்கும் அதற்குக் கூடுதலாகவும் பதிவுசெய்துள்ள ஒப்பந்தகாரர் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 100/- செலுத்தி பிரதமபொறியியலாளர், (நெடுந்தெருக்கள்) யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 4-10-81ந் திகதிக்குள் விண்ணப்பித்து கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். கணேசரத்தினம்
பிரதம பொறியியலாளர்
(நெடுந்தெருக்கள்)
யாழ்ப்பாணம்.
761, பீச்றோட்,
யாழ்ப்பாணம். 1057

## மூதல் தோற்றத்திலேயே முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

புலோலி கிழக்கு இலங்கை சபாரத்தினம் கைம்பெண் பொன்னம்மாவின் மரணசாதனச் சொத்துக்கள் சம்பந்தமாக

காலஞ்சென்றவர்
புலோலி தெற்கு சாப்பா கனகசபைணா வயித்திலிங்கம்
மனுதாரர்

மரணசாதன
நியாயதிக்க இல: T/1107

மேலேயுள்ள இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ் சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
க. செல்வராசா,
பதிவாளர்.

வரைவு
ஒப்பம்
வ. செல்லையா
மனுதாரரின் சட்டத்தரணி.
1038

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 12-ம் திகதி
திங்கட்கிழமை
(28 - 9 - 81)

மேடம்: தூரத்துச் செய்தியொன்று துயரத்தில் ஆழ்த்தும், பிணிக்கு இடம் கொடாது உடல் நலத்தைப் பேணவும் துக்கமான தினம்.

இடபம்: மகிழ்ச்சிகரமான நினைவுகளுடன் காலையில் விழித்து எழுவீர்கள் இடையில் துண்டிக்கப்பட்ட தொடர்புகள் மீண்டும் தொடர்கதையாகலாம் சுப போகதினம்.

மிதுனம்: கடன் தொல்லைகள் கலையத்தரும் உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும், புதிய முதலீடுகளைத் தவிர்ப்பதுடன் உஷாராக இருக்கம்.

கடகம்: குடும்பவாழ்க்கை இன்று சுமுகமாக இருக்கும், புண்ணியவிருப்புக்களில் ஆர்வம் பிறக்கும், சுற்றுடலில் நிம்மதிசீர்பெறும்.

சிம்மம்: கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும் எதையும் தைரியமாகச் செய்வீர் வெற்றி காணபீர்கள் சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்.

கன்னி: பொருள்துறையில் திருப்திகரமான சூழ்நிலை தென்படும், பெரியோர் ஆதரவு பெறும்.

துலாம்: செய்தொழில் தடுமாற்றநிலை தென்படும், வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ளநேரிடும். குடும்பத்தில் சிறு பிணிதோன்றும், பொறுமையை மேவி நடக்கவும்.

விருச்சிகம்: கண்துடைப்பு வேலை நடைபெறும், மனப் போராட்டம் அதிகரிக்கும் சிலருக்கு நயன ரோகமும் தென்படலாம், சுகாதாரம் வேண்டும்.

தனு: வாழ்க்கைப்பூங்காவில் வசந்தம் நிலவும், சுபகருமங்கள் நடைபெறும் காரியத்தில் கண்ணைக்கவும், மகிழ்ச்சிகரமான தினம்.

மகரம்: எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும், எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும், சிலருக்கு எதிர்பாராத விதமாக உடல் நலம் பாதிக்கப்படலாம்.

கும்பம்: இதயபாரம் நீங்கும் நன்மையான திருப்பங்கள் ஏற்படும், மாதுருவழியாலும் பொருள்வரவுக்கு இடமுண்டு.

மீனம்: மக்களால் மகிழ்ச்சி செல்வாக்கும் பெருகும், திறமைக்கு மூதலி—மூண்டு, முன்னேற்றமான நாள்.

சோதிட கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## வீடு விற்பனைக்கு

சங்கானை பிரதான வீதியருகில் விசாலமான வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:
திரு. S. தேவரஞ்சன்
Commercial Bank
யாழ்ப்பாணம். 1077

## பட்ஜெட்டுக்கு முந்துங்கள்
## சிசில் குளிர்சாதனப் பெட்டிகள்
SISIL REFRIGERATORS

★ ஒரு வருட தயாரிப்பாளரின் உத்தரவாதம்
★ எல்லா உறுப்புகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
★ மிகக்குறைந்த விலையில் ஒருசிறந்த பொருள்
★ திருத்துதல், பெயின்ற் அடித்தல்

திறமான முறையில் தொழில் நியாயமான செலவில் பயிற்சி பெற்ற வேலையாட்களால் செய்து கொடுக்கப்படும்.

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்
சிலோன் மேர்ச்சன்ஸ்லிமிற்
484 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## வரிவிளம்பரம்

### தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல்யமான வியாபார ஸ்தாபனம் ஒன்றிற்கு விற்பனையை மேற்பார்வைசெய்து தினசரி அதற்குரிய கணக்கை முடிக்கக்கூடிய ஒருவர் தேவை. அனுபவம் உடைய 35 வயதுக்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது. தகைமை அனுபவம் முதலிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:1069, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1069

யாழ். நகர எல்லைக்குள் இரண்டு முதல் நாலு பரப்பு வெறும் காணி அல்லது பழைய வீட்டுடன் காணி தேவை (2) யாழ்ப்பாணத்தில் கலட்டுத்தறை தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1084 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1084

### பயிற்சி

எலக்றிக்கல் (வயறிங்) பயிற்சி 30-09-81 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியறிங் ரெக்னோலொஜி, 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1073

### விற்பனைக்கு

விரைவாகவும் கூடுதலாகவும் பயன்தரக்கூடிய நல்லின தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. மிக்கிலைவத் - யாழ்ப்பாணம். 1053

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அருகாமையில் இல 35 கோவில் வீதி கொக்குவில் கிழக்கில் 3 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். S. துரைராசசிங்கம் இல 35 கோவில் வீதி, கொக்குவில். 1080

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். திருமதி M. மீனாட்சி உலகைகலமீடு, புலோலி மேற்கு புலோலி. 1081

நல்ல நிலையில் உள்ள பெரிய வேம்பு விற்பனைக்கு உண்டு. சிவராசா விஞயகர் ஸ்ரோஸ் சண்டிலிப்பாய் மதில். 1082

விரைவாகவும் கூடுதலாகவும் பயன் தரக்கூடிய நல்லின தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு மிக்கிலைவத் - யாழ்ப்பாணம். 1086

### வகுப்புகள்

A. L. O. L. பகல்நேர வகுப்புக்களும் தொழில் புரிவோருக்கு மாலைநேர வகுப்புக்களும் தூர இடத்திலிருப்பவருக்கு சனி ஞாயிறு வகுப்புக்களும் குறுகிய காலத்தில் முடிக்க விரும்புபவர்களுக்கு தனி ஆங்கில வகுப்புக்களும் (Private Tuition) பின்வரும் துறைகளில் நடாத்தப்படும். Spoken English, English for General Proficiency, English for General Exam, Grammer இத்துடன் தட்டச்சு, சுருக்கெழுத்து ஆங்கிலத்திலும், தமிழிலும் பயிற்றப்படும். ஆண், பெண் இருபாலாருக்கும் விடுதி வசதியுண்டு. முகவரி யாழ்ப்பாணக் கல்வி நிலையம் 22 இராமையா செட்டியார் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (பஸ் நிலையத்திலிருந்து 80 யார் தூரத்திலுள்ளது) 1083

## மணிவாக்கு

நினைவுக்குரிய செய்தி எதுவையும் நான் புதினத் தாளில் படித்ததில்லை; தத்துவஞானிக்கு செய்தி என்பதெல்லாம் வீண் அரற்றலே! —ஹென்றிதோரோ

# நமது நோக்கு

## உயர்கல்வி வாய்ப்பு

''உயர்கல்வி வாய்ப்பற்ற தமிழ் இளைஞர்களினால்தான் தமிழ்ப்பிரச்சினை இன்று முனைப்புறுச்செய்யப்பட்டுள்ளதெனக் கூறினால் அக்கூற்றை எவரும் எதிர்க்க மாட்டார்கள்.''

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவதுபட்டமளிப்புவிழாப் பேருரை நிகழ்த்திய துணைவேந்தர் சு. வித்தியானந்தன் தமிழிலும், ஆங்கிலத்திலும் அடித்துக் கூறியிருக்கிறார்.

இந்த உண்மையை அவர் கூறியதுபோல் பண்புடைய எவரும் ஆட்சேபிக்கத் துணியார். எம்மைப் பொறுத்தளவில் எமதுபேனா தேயத்தேய இதனை வற்புறுத்திவந்தோம். தரப்படுத்தல், மாவட்ட அளவுத்தொகை, பின்தங்கிய பிரதேச அளவுத்தொகை போன்ற ஆயுதங்களுக்கு யாழ்ப்பாணத்தில் நிலவுவதாகக் கருதப்படும் பயங்கரவாதத்துக்கும் தொடர்புண்டா என்பதையும் ஆராயவேண்டுமெனக் கோரி வந்தோம்.

சில உண்மைகளைப்போல கசப்பான பண்டங்கள் காண்பதரிது. சிறந்த மருந்துகள் கசப்பாயிருப்பதால் அவற்றிற்கு இனிப்பூட்டும் வழக்கம் இன்றைய மருத்துவக்கலையில் காணப்படுகின்றது.

இதனை வைத்திய நிபுணர் குழாமே கையாளுகின்றது. எனவே நாட்டின் ஆட்சியாளர்கட்கு இந்தக் கோரிக்கையை அடிக்கடிவிட்டிருந்தோம். இனிப்பூட்டுவதற்கும் நிபுணத்துவம் தேவைப்படும்.

சென்ற பொதுத் தேர்தலில் தரப்படுத்தல் என்ற அநாகரிக முறையைக் கைவிடுவோமென்று வாக்குறுதி ஐ. தே. கட்சியின் தேர்தல் பிரசாரத்தில் காணப்பட்டது. சொன்ன பாவத்துக்கு ஒருமுறை அதனைச் செய்தனர். தமிழ் மாணவர்களின் தொகை மீண்டும் நியாயமான இடத்தைப் பிடித்தது.

இதன் எதிரொலியைப் பாராளுமன்றத்தில் கேட்டவர்கள் இவ்விடயத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா எவ்விதசமபோக்கை நாடிய போதும், நிதானம் நடுக்கடலில் நீந்தும் ஆற்றல் அற்றதென்பதை அறிந்தனர்.

தரப்படுத்தல் என்ற பழைய பாட்டை வேறு இராகத்தில் பாடவேண்டும் என்பதே இன்று அமுலிலிருக்கும் மாற்றுப் பிரவேச முறை.

இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர்களின் தொகையை என்றும் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை முடிவுப் பட்டியலில் காணலாம். இன்று மேனாடுகளில் குறிப்பாக இங்கிலாந்தில் உயர் பட்டம் பெற்று, விஞ்ஞான, பொறியியற்கலாநிதிகளாக, பல்கலைக்கழகப் புலமைப் பரிசில் பெற்று ஆராய்ச்சியாளர்களாகக் கடமை புரியும் தமிழ்ப் பட்டதாரிகள் சிலர் இங்கு அனுமதி பெறாத பாக்கியசாலிகள்.

இன்னொரு சாரார் பல்கலைக்கழக அனுமதியை வீணாகக் காத்திருக்காமல் இங்கேயேயிருந்து கணக்கியல் படித்து சாட்டேர்ட், ஐ. சீ. எம். ஏ, போன்ற பெரும் பட்டங்களை எவ்வித தாமதமுமின்றி - சிலர் மூன்று வருடங்களில் படித்து முடித்தனர்; முடிக்கின்றனர். இந்த வர்க்கத்தினர் உண்மையில் அதிர்ஷ்டசாலிகளே! உலகில் பல பகுதிகளில் நினைக்கமுடியாத உயர் சம்பளம் பெறக்கூடிய வாய்ப்புப் பெற்றவர்கள். ஆனால் வசதியற்ற ஏனையோரின் கதி என்ன?

நாட்டில் வாழும் பிரஜைகள், தேசிய அடிப்படையில் - சரிநிகர் சமானமானவர்கள் என்று பறைசாற்றினால் தகுதி அடிப்படையை விட வேறு எதுவும் இடம் பெறலாமா?

'தனிச் சிங்களம்' என்ற சட்டத்துக்குத் தம்பியாகப் பிறந்ததே இந்த இன்றைய 'மாவட்ட அளவுத்தொகை, பின்தங்கிய பிரதேச அளவுத்தொகை' என்ற நிதானமற்ற அனுமதித்திட்டம்.

'தனிச் சிங்களத்தால்' வந்த அரசியல் சமுதாய நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்த்தால், இந்த விபரீதமான பல்கலைக்கழக அனுமதித்திட்டம் கைவிடவேண்டியது தெளிவாகும்.

எவ்வாறு 'தனிச் சிங்களம்' திணிக்கப்பட்டதால் தமிழ் மாணவர்கள் சிங்களம் படிப்பதை நிறுத்தினார்களோ, அவ்வாறே இவ்வித அனுமதிப் பாகுபாட்டை அவர்கள் என்றும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லையென்பது திண்ணம்.

அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி அநீதியான செயலொன்றைச் செய்ய முடிந்தபோதும் அதன்விளைவுகள் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களை மட்டுமல்ல, நாட்டுக்கே நட்டமென்பதை ஆட்சியாளர்கள் உணரக்காலம் வந்துவிட்டது. ''நெடுகிறேன் பந்தயம் பிடி'' என்பது அரசியல் முதிர்வுக்கு அழகல்ல.

தமிழர்களின் கடைகளை பொதுநலஸ்தாபனங்களை எரித்தது, அவர்களின் சொத்துக்களைச் சூறையாடல், அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துதல், அவர்களை நேரடியாகப் பாதிக்கிறதென்பதை எந்தச்சூழந்தையும் அறியும்.

சாதாரண பொது அறிவுள்ள மக்கள் இவ்வித கலவரங்கள், அழிவுச் சம்பவங்கள் நாட்டை நாலாவழியிலும் குட்டிச் சுவராக்கி விடுகிறதே என்று உணரத் தொடங்கினால் இனப்பிரச்சினை உயர்கல்விக்குள் இடம் பெறமாட்டாது.

## உ. அ. பணிமனைக்கு அரச அதிபர் விஜயம்

(மாவிட்டபுரம்)

வலி-வடக்கு உதவிஅரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு யாழ் அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா விஜயம் செய்து பார்வையிட்டார்.

அலுவலகத்தில் நிலவும் குறைபாடுகள் கிராமசேவை அலுவலர்களது குறைபாடுகள், நிதி ஒதுக்கீடுகள் பற்றியெல்லாம் ஆராய்ந்த அரச அதிபர் குறைபாடுகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

வலி-வடக்கு உதவிஅரசாங்க அதிபர் திரு க. மகாதேவா காரியாலய நடைமுறைகளையும், குறைகளையும் எடுத்து விளக்கினார்.

வலது குறைந்தவரான மாதன் காந்தி என்பவருக்கு சுயதொழிலுக்கான ஆரம்பப் பணமாக 400 ரூபாவை அரச அதிபர் கையளித்தார். (அ)

## சாவகச்சேரியில் கண்டெடுத்த பணம் யாருடையது?

(சாவகச்சேரி)

''எல்லோரும் நேர்மையாக நடந்துகொண்டால் கிராமத்தில் சுபீட்சமும் சந்தோஷமும் நிலவும். ஆயிரத்துக்கு மேற்பட்ட பணத்தை உரியவரிடம் சேர்க்க எல்லோரும் விரும்பமாட்டார்கள். நேர்மையானவர்களை நாம் பாராட்டவேண்டும்''.

சாவகச்சேரிச் சந்தையில் கண்டெடுத்த 1000 ரூபாவுக்கு மேற்பட்ட பணம் சில பற்றுச்சீட்டுகள் என்பன அடங்கிய பேர்ஸை கண்டெடுத்து மிருசுவில் கந்தையா சுந்தரலிங்கம் என்பவர் சாவகச்சேரிப் பொலிசில் ஒப்படைத்தபோது சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய அதிபர் திரு. கே. எம். ஏ. தென்னக்கோன் அவரைப் பாராட்டி மேற்கண்டவாறு கூறினார்.

திட்டவட்டமாக எவ்வளவு பணம் என்னென்ன பற்றுச்சீட்டுக்கள் என்பவற்றை உரியவர் ஆதாரம் காட்டி பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். என பொலிஸ் நிலைய அதிபர் தெரிவித்தார். (அ)

## மக்கள் கருத்து

### யாழ்ப்பாண வரலாற்றையும் கோவை செய்க

முல்லைத்தீவு மாவட்டத்தின் சரித்திர, கலை, கலாச்சார விபரங்களைக் கோவை செய்தற்பொருட்டு முல்லைத்தீவு அரச அதிபர் ஒரு சுற்றறிக்கையை விடுத்துள்ளார். இதற்கான உதவிகளை நல்கும்படி அம்மாவட்டத்தின் சங்கங்கள், சபைகள் மற்றும் சாதாரண பொதுமக்களிடம், பரம்பரையாக புத்தகரூபமற்ற தொடர்ந்துவரும் கர்ணபரம்பரைக் கதைகள், நாட்டுப் பாடல்கள், வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த சம்பவங்களையும் தெரிவிக்கும்படி கோரியுள்ளார், இது வரவேற்கவேண்டிய ஒன்று.

இலங்கையின் தலையாகவும் உலகத் தமிழரின் கடைசித் தமிழ் மன்னன் கோலோச்சிய இடமாகவும் விளங்குவது யாழ்ப்பாணம். இற்றைவரை இதன் சரித்திர, சாத்திர, வைத்திய, இலக்கிய பண்டைய நிகழ்வுகள் ஒரு சில, பழையோர் எழுதிய நூல்களைப் பின்பற்றியே அதிகப்படியாக எழுதப்பட்டுள்ளன. யப்பான் மொழிக்கும் தமிழ் மொழிக்கும் தொடர்புண்டு என்று அண்மையில் தஞ்சாவூருக்கு விஜயம் செய்து சாதாரண மக்களுடனும் கலந்துபேசி யப்பான் அறிஞர் உண்மையை ரூசுப்படுத்தியதுபோல், எமது அறிஞர்கள் இற்றைவரை சாதாரண பொதுமக்களிடம் தேங்கிக்கிடக்கும் கருத்துக் கருவூலங்களை வெளிக்கொணரத் தவறியுள்ளார்கள் எனவே முல்லைத்தீவு அரச அதிபர் எடுத்த நடவடிக்கைபோல் யாழ். அரச அதிபரும் எமது மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவரும் நடவடிக்கை எடுத்து எமது யாழ்ப்பாணத்தின் சிறப்பினை மேலும் எல்லோரும் நன்முறையில் அறிய வழி செய்யவேண்டும்.

க. சி. இராஜேஸ்வரன்

ஆடியபாத வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.




[2]

நாம் சந்தித்தது ஒருவரை, இருவரை மட்டுமல்ல; பல்வேறு தரங்களிலும் பணிபுரியும் பலரைச் சந்தித்தோம். விஷயங்களை ஆராய்ந்தோம். ஆதாரபூர்வமாக அவர்கள் விளக்கம் தரும்போது, அதனை ஏற்று ஓரளவு பரிசீலிக்க விரும்புகின்றோமே தவிர, 'அதிகம்தெரிந்துவிட்டது போல', முந்திரிக்கொட்டையாக முன்னுக்குச் செல்லமுடியவில்லை. பலரும் பலவிஷயங்களைக்கூறும்போது, அவற்றிலெல்லாம்பொதுவானதொரு உண்மை காணப்படுகின்றதே தவிர அவர்கள் சுமத்தும்குற்றச்சாட்டுக்களை மறைக்கவோ, நிராகரிக்கவோ முடியவில்லை! காரணம், இதில் சம்பந்தப்பட்டவர்களே இவர்கள் தானே!

''மிகவும் பின்தங்கிய எதும் பகுதியை அபிவிருத்தி செய்யவே- சமூக முன்னேற்றம் கருதியே சீ-நோர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் என்ன நடந்திருக்கிறது? நாம் உயரவில்லை; எமது பிள்ளைகள் வளரவில்லை. நாம் ஏமாந்தோம்; ஏமாற்றப்பட்டோம்; வஞ்சிக்கப்பட்டோம்...'' என்று சிலர் கூறியபோது உடனடியாக இக்கருத்தை எம்மால் ஜீரணிக்க முடியவில்லை! சீ-நோர் ஒரு பாரியதிட்டம். பிற்பட்டபகுதி முதல் 1979ம் ஆண்டுவரை நிதிஉதவி நேரடியாகக்கிடைப்பதற்கு திரு. ஆனே மூலகர்த்தாவாக இருந்தார் என்பதையும், சீ-நோரின் துரிதவளர்ச்சிக்கு இவர் ஒரு காரணமாக இருந்தார் என்பதையும் விபரமாகத்தெரிந்துகொண்டபோது திரு. ஆனே ஏன் இன்னும் கூடுதல் பங்கு ஏற்றுகொள்ளக் கூடாது என்ற கேள்வியே மனத்தில் எழுந்தது.

இது நமக்கு ஒரு புதிராக இருந்தது!



திரு. ஆனே

சீ-நோர் திட்டம் ஆரம்ப காலத்தில் ஐவரைக் கொண்ட இயக்குநர் சபையினால்தான் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அந்த நேரத்தில் நிதி உதவிக் கமிட்டித் தலைவராக திரு.

## 'ஈழநாடு' கள ஆய்வுக் குழுவின் நேரடி கண்டுபிடிப்புகள் - (1)

மக்களின் முன்னேற்றத்துக்காகவே ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிலையில், நோக்கமே சிதைவுபடுவது போல, இப்பகுதி மக்கள் புறக்கணிக்கப்படுவதென்றால்...?

சற்றுப் பின்னோக்கினோம்...

சீ-நோர் திட்டம் ஆரம்ப காலத்திலிருந்து படிப்படியாக முன்னேறி வந்ததற்குக்காரணகர்த்தாக்களாக இருந்தவர்களில் நம்மவர்களில் திரு. அன்ரன் ராஜேந்திரா என்றால் நோர்வேநாட்டவர்களில் திரு ஆனே பியட்டொவ் முக்கியமானவர். திரு. ராஜேந்திரா இலங்கையில் இல்லை. நோர்வேப் பெண்ணை மணந்து அங்கேயே குடும்பமாக இருக்கிறார். திரு. ஆனே இலங்கையில் தொடர்ந்திருக்கின்றார். சீ-நோருடன் இன்றும் மிகவும் நெருக்கமாகப் பணிபுரிகின்றார். அவரது சேவை தொடர்ந்து தேவைப் படுவதாகக் கூறுகிறார்கள்.

ஆனால், திரு. ஆனேயும் இப்பொழுது மனம்மாறி வருவதாகச் சிலர் கூறினார்கள்.

இன்றைய 'குழப்ப'மான நிலையில் திரு. ஆனேயும் மனம் மாறிவிட்டால்; இழப்பு பாரதூரமானது என்று இவர்கள் தெரிவித்தபோதுதான் அவரது சேவையின் மகத்துவத்தை எங்களால் உணரமுடிந்தது

நோர்வே நாட்டிலிருந்து சீ-நோருக்கு 1967ம் ஆண்டு ஆனே விளங்கினார். இயக்குநர் சபையில், இத்திட்டத்தின் முன்னோடிகளும் (இலங்கையர்-நோர்வே நாட்டைச் சேர்ந்தவர்) மற்றும் ஊழியர்களும் அங்கம் வகித்தனரே தவிர, அந்நியர் தலையீடோ அல்லது அரசாங்கங்களின் குறுக்கீடுகளோ இருக்கவில்லை சீ-நோரின் அடிப்படை நோக்கம் கிராம அபிவிருத்தி, கிராம விஸ்தரிப்புத் திட்டங்களை ஆரம்பிப்பதும், இப்பகுதி மக்களின் சமூக முன்னேற்றத்துக்கு தனது முழுப் பங்கினை அளிப்பதுமே! ஆனால், காலம் செல்லச் செல்ல, மேகங்கள் கலைந்து செல்வதுபோல எல்லா நிலைகளிலும் தடுமாற்றம் தென்பட்டதே தவிர, நிலையான எதிர்காலத்தை இப்பகுதி மக்களினால் காணமுடியவில்லை ஏமாற்றமே வளர்ச்சி கண்டது.

இதனைச் சற்று விரிவாக எல்லா நிலைகளிலும் ஆராய்வோம்.

இந்த வரிசையில் லாபத்தைக் குறிக்கோளாகக் கொள்ளாது, முழுச் சேவையே நோக்கமாகக் கொண்ட சீ-நோர் அபிவிருத்தி நிறுவனத்தின் முதலாவது திட்டமான, சீ-நோர் அமைந்துள்ள கிராமப் பகுதியில் வேலையற்றிருக்கும் ஏழை வாலிபர்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளித்தல் பற்றிமுதலில் பார்ப்போமா? (நாளை தொடரும்)

## அக்கா கண்டித்ததால் தம்பி தற்கொலை

(பச்சிலைப்பள்ளி)

வேலைக்குப் போகாமல் உணவு எப்படிவரும்என அக்கா கண்டித்ததினால் தம்பி நச்சு திரவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் பளையில் உள்ள அரசடி என்னுமிடத்தில் நடைபெற்றது.

செல்வராசா என்னும் 21 வயது இளைஞரே தற்கொலை செய்தவராவர்.

தற்கொலை செய்துகொண்டவர் தந்தையாருடன் கோபித்துக்கொண்டு வந்து தனது சகோதரி வீட்டில் இருந்ததாகவும் சகோதரி வேலைக்குப் போய் வேலைசெய்யாமல் உணவு எப்படி வரும் எனச் சகோதரனைக் கண்டித்ததினால் அவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டதாகவும் மரண விசாரணையின்போது தெரியவந்தது.

மரணமானவரின் தந்தையான வேலுப்பிள்ளை, சகோதரி மகேஸ்வரி ஆகியோரும் மரணவிசாரணையில் சாட்சியமளித்தனர்.

மரணவிசாரணை நடத்திய பளை மரணவிசாரணை அதிகாரி திரு. எம். குமாரவேலு தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். சாவகச்சேரி பொலிஸ் உத்தியோகத்தர் திரு. வி. வல்லிபுரநாதன் சாட்சியை ஆஜர் செய்தார். (க)

## மினிபஸ் சாரதிக்கு அபராதம்

(சாவகச்சேரி)

81ம் ஆண்டுக்குரிய லைசன்ஸ் எடுக்காததிற்கும் கூடுதல் பிரயாணிகளை ஏற்றியமைக்காகவும் மினிபஸ் சாரதியான மல்லாகத்தைச் சேர்ந்த க. அமிர்தலிங்கம் என்பவருக்கெதிராகச் சாவகச்சேரிப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு ஆரம்ப நீதிபதி திரு. எஸ். வேததாசன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ளவே முதலாவது குற்றத்திற்கு 30 ரூபாவும் இரண்டாவது குற்றத்திற்கு 100 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (க)

## சில கடைகளில் சீனி விலை குறையவில்லையாம்

(சாவகச்சேரி)

சீனியின் விலையை அரசு குறைத்துள்ள போதிலும் சாவகச்சேரிப் பகுதியில் சில வியாபாரிகள் பழையவிலைக்கே சீனியை விற்றுவருவதாகப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

## ஆசிரியர்களுக்கான ஞான ஒடுக்கம்

(சாவகச்சேரி)

மன்னார் மறைமாவட்ட ஆசிரியர்களுக்கான ஞானொடுக்கம் அடுத்தமாதம் 16ம், 17ம், 18ம் திகதிகளில் மடுத் திருப்பதியில் நடைபெற இருக்கிறது. இந்த ஞானொடுக்கம் சம்பந்தமான சகல ஏற்பாடுகளையும் செயலாளர் திரு. அ. அந்தோனிமுத்து கவனித்து வருகின்றார். (அ)

## வவனியாவில் உலக உணவு தினம்


(புளியங்குளம்)

வவனியா மாவட்டத்திலுள்ள சகலபாடசாலைகளிலும் அடுத்த மாதம் 16ம் திகதி முதல் 21ம் திகதிவரை உலக உணவு தினம் கொண்டாடப்படவுள்ளது. இது தொடர்பாக மரம்நாட்டு விழாவை நடாத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல பாடசாலை அதிபர்களையும் வவனியாப் பிரதேசக் கல்வி பணிப்பாளர் திரு. எஸ். பி. இலயாதம் பணித்துள்ளார்.





# பெயார் பிராண்ட் தங்கம் தேடும் போட்டியில் 100 தங்கப் பவுண்களை வெல்லுங்கள்.




400 கிறும் ரூ. 18/50

- இல்லத்தரசிகளே! 22 கரட் கொண்ட 100 தங்கப் பவுண்களை வென்றெடுக்க இதோ உங்களுக்கு ஓர் அருமையான சந்தர்ப்பம். இந்த தங்கம் தேடும் போட்டிக்கான அவகாசம் செப்டம்பர் 20 முதல் இரண்டு மாதங்கள் மட்டுமே.
- தாமதியாதீர்கள். நீங்கள் வாங்கும் பெயார் பிராண்ட் பால் மா பக்கெட்டின் உலோகக் கடதாசிப் பையின் உட்பக்கத்தில் தங்க நிறத்திலான காகித அட்டை ஒன்று ஒட்டப்பட்டிருக்கிறதா என்பதை தவறாது கவனியுங்கள்.
- இப்படியான ஒன்றை கண்டெடுத்தால் வெற்று உலோகப் பையை பாதுகாப்பாக வைத்திருங்கள். ஏனெனில், பெயார் பிராண்ட் தங்கம் தேடும் போட்டிக்கு அதுவே உங்களைத் தகுதியாக்குகின்றது.
- அத்துடன் நின்றுவிடாதீர்கள். தங்க நிற காகித அட்டைகளை மேலும் தேடுங்கள். நீங்கள் கண்டெடுக்கும் ஒவ்வொரு அட்டையும் ஒவ்வொரு தங்கப் பவுணைத் தேடித்தரும் வாய்ப்பினை உங்களுக்குக் கொடுக்கிறது.
- தங்க நிற அட்டை ஒன்று உங்களுக்குக் கிடைத்ததும் விண்ணப்பப் படிவத்தையும் பெயார் பிராண்ட் புதிரையும் பூர்த்தி செய்து பதிவுத் தபாலில் "பெயார் பிராண்ட் தங்கம் தேடும் போட்டி", சிலோன் நியூட்ரிஷனல் ஃபூட்ஸ் லிமிட்டெட், த. பெ. இல: 189, கொழும்பு 10 என்ற முகவரிக்கு எழுதவும்.
- பெயார் பிராண்ட் புதிர் படிவத்தையும் நீங்கள் சரியாக நிரப்பியிருந்தால் எங்கே, எப்பொழுது உங்கள் பெயார் பிராண்ட் உலோகக் கடதாசிப் பையுடன் வந்து உங்களுக்குரிய தங்கப் பவுணைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை விரைவில் அறிவிப்போம்.
- எனவே, இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள். பெயார் பிராண்ட் பாலின் போஷாக்கை உங்கள் குடும்பம் முழுவதும் பெறும் அதே வேளையில் தங்கப் பவுண்களை வென்றெடுக்கும் வாய்ப்பினையும் நீங்கள் பெறுகிறீர்கள்.
- சுத்தமான பசுப்பாலில் இருந்து தயாரிக்கப்பட்டு, தரக்கட்டுப்பாட்டிற்குள்ளான பெயார் பிராண்ட் முழு ஆடைப் பால்மாவில் நீங்கள் எப்பொழுதும் நம்பிக்கை வைக்கலாம்.
- உங்கள் பிள்ளைகளுக்கும் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் பெயார் பிராண்ட் முழு ஆடைப் பாலைக் கொடுப்பதுடன் தங்க நிற அட்டைகளையும் தேடுங்கள். சமையலுக்கும் இன்சுவைப் பண்டங்களுக்கும்கூட பெயார் பிராண்ட் பாலைப் பயன்படுத்தலாம்.

இதனை வெட்டி வைத்துக்கொள்ளவும். நீங்கள் கண்டெடுக்கும் ஒவ்வொரு தங்க நிற அட்டைக்கும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவம் தேவை.

பெயார் பிராண்ட் தங்க வேட்டை

(இடைவெளி நிரப்புக)

பெயார் பிராண்ட் முழு ஆடைப்பால்மா

________ ________ ________ இருந்து

தயாரிக்கப்படுகிறது. ஒரு கிளாஸ் பால் தயாரிக்க உங்களுக்கு

________ கரண்டி பெயார் பிராண்ட் பால்மா தேவைப்படும்.

உள் உலோகப் பையினுள் அடங்கியுள்ள வட்டவடிவமான தங்க நிற காகித அட்டையைக் கொண்ட பெயார் பிராண்ட் பெட்டியொன்று எனக்குக் கிடைத்துள்ளது.

பெயர் ________________

முகவரி ________________

________________

எனக்குரிய தங்கப் பவுணை நான் எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதைத் தெரிவிக்கவும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

உத்தரவுப் பத்திர இல. 294

________________

போட்டியாளரின் கையொப்பம்.

சிலோன் நியூட்ரிஷனல் ஃபூட்ஸ் லிமிட்டெட், கிறண்ட் கென்யன் அன்ட் எக்காட் (லங்கா) லிமிட்டெட் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

## இன்றே பெயார் பிராண்ட் தங்கம் தேடும் போட்டியில் சேருங்கள்!

Grant K&E 4117

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஜமுனா
குழந்தையும் தெய்வமும்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30
எம். ஜி. ஆர்
சரோஜாதேவி
அரசகட்டளை

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
லோஜி-ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி
பைரவன்

## ஞாபகார்த்த நூலகம்

[சாவகச்சேரி]

மாசுவ - கொல்லங்கலட்டி சனசமூகநிலையத்தின் ஆதரவில் தம்பு செல்லரத்தினம் ஞாபகார்த்த நூலகம் ஒன்று கொல்லங்கலட்டியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நூலகம் ஒன்று இல்லாத குறையைப் போக்கவும் இப்பகுதி இளைஞர்களின் பல்துறை அறிவை வளர்க்கும் நோக்குடனும் இந்த நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

## வெற்றி

[அரியாலை]

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தினரும் யாழ் பரி. யோவான் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் 5-0 கோல்களால் வெற்றியீட்டியது.

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-லட்சுமி
அவன்-அவள்
அது (சுவட்மஸ்கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும்
அற்புதவிளக்கும்

REGAL ரீகல் Daily 5 Shows
2-10-81 வரை
"ஜங்கிள் புக்"
காட்சி நேரம்: 10-30, 2-15, 4-40, 7-00, 9-30

(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-15, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
ஆலயமணி

WINDSOR JAFFNA
Daily at 10-30 a.m., 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
SEAN CONNERY & CANDICE BERGEN
in
"The Wind and The Lion"
(Color—Cinemascope)
29-9-81 TO 1-10-81
Richard Dreyfus (Jaws Fame) in
Good Bye Girl
(Academic Award Love Story [Color]

27 9-81 வரை
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 4-45
7-00, 9-30
SMOKEY AND THE BANDIT

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர், பாக்கியராஜ் சுமதி
மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

6 வது வாரம்
ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
(யாழ்நகர்)
மஞ்சுபார்கவி ... துளசிராம்
சங்கராபரணம் (கலர்)

சாந்தி 2வதுபரபரப்பூட்டும்ஹவுஸ்புல் வாரம்
(யாழ் நகர்) 10-30, 2-30, 6-15 & 9-45
கமல்...
ஸ்ரீதேவி...
குரு
நம்பியார்
வெண்ணிறஆடை
நிர்மலா- முத்துராமன்-
சுந்தரராஜன்
தென்னாட்டில் மிகுந்த பரபரப்பூட்டிய வண்ண ஓவியம்

## புகழில் வாழும் பண்பாளர்

சம்பத்திரிசியார் கல்லூரியின் ஆசிரியராக அமரர் சாம் அல்பிரெட் கடமையாற்றியதை தொகுத்து நோக்கின் அவர் ஒரு கடமை வீரன் என்பதே எனது கருத்தாகும். அவருடைய இருபத்தாறு வருட ஆசிரிய சேவையை எடுத்து நோக்கின் அவர் ஒரு சிறந்த கிறீஸ்தவ ஆசிரியருக்கு உதாரணமாகத் திகழ்ந்தார். பலவழிகளிலும் பத்திரிசிய நிறுவனம் புகழ் வானில் சிறகடித்துப் பறப்பதற்கு அவர் இறகுகளாக மாறினார். இவர் வகுப்பறையிலே மாணவர்களால் அறிவும் ஆற்றலும் ஆர்வமுள்ள இரசாயன ஆசிரியராக இனங்காணப்பட்டார்.

எனது கடந்த ஒன்றரை வருடகால அதிபர் வாழ்வில் உயர்வகுப்பு மாணவர்களின் பொறுப்பாளராகவும், விளையாட்டுத்துறைக்காரியதரிசியாகவும் விளங்கி அவர் எமது நிர்வாகத்துக்கு அளித்த ஒத்துழைப்பு அளப்பரியது. பல சந்தர்ப்பங்களில் எமது கல்லூரியின் ஒழுக்கத்தையும் புகழையும் கட்டிக்காக்க அவர் கல்லூரி நேரமில்லாத வேளைகளிலும் கல்லூரிக்காக உழைத்தார்.

ஆசிரிய பதவிக்கான உயர்ந்த இலட்சியங்களுடன் திகழ்ந்த அவரில் எனக்கு பிடித்தமான மற்றொரு பண்பு அவரின் நேர்மையும் நல்லொழுக்கமுமாகும். வெளித்தோற்றங்களுக்கு மதிப்பளிக்கும்பழக்கம் அவருக்கு இல்லை. உண்மையையும் நீதியையும் நேசித்து பிழையானவற்றை தவறுகளை துணிந்து எதிர்க்கும் கிறீஸ்தவ மனப்பாடு அவரது உடன் பிறந்த பண்பு. அவருடைய இரும்பு மனதுக்கும் உறுதியான உயர்ந்த புறத்தோற்றத்துக்கும் உள்ளே தங்கமான அவரின் இதயம் இயங்கிக் கொண்டிருந்தது.

அவருடைய நண்பர்கள் அவர் எவ்வளவு இனிய நட்பாளர் எனக் கூறி மகிழ்வர். அவர் கல்லூரி பழைய மாணவ சங்கத்தில் பத்திரிசிய உணர்வையும் புகழையும் பரப்ப எடுத்த முயற்சிகள் பல. அவர் வெளித்தோற்றத்திற்கு எதையுமே சீரியஸாக கருதுபவர் போல தோன்றினாலும் அவரின் உண்மையாகவே உள்ளத்தால் நேசிக்கும் பண்பும் உசீரப் பேசும் பலருடைய இதயத்தில் அவரை நீங்காத இடம் பெறவைத்தது. அவரது ஆலோசனைகளும் அறிவும் சம்பந்திரிசியார் கல்லூரிக்குள் மட்டும் அடங்காது முழுத் தமிழ் ஈழத்திற்கும் பயன்பட்டது. றோட்டரிக் கழகம் போன்ற சமூகசேவை அமைப்புகள் மூலம் அவர் சமூகப் பணியாற்றினார். அவருடைய மறைவால் சம்பத்திரிசியார் கல்லூரி மட்டுமல்ல முழுத்தமிழ் மாணவ சமூகமுமே ஒரு தலைசிறந்த இரசாயன அறிஞரை இழந்து தவிக்கிறது. அவருடைய இழப்பால் ஏற்பட்ட வெறுமை இலகுவில் நிரப்பப்படக்கூடிய ஒன்றல்ல.

அவர் நேர்மையோடு வாழ்ந்தார். இன்று புகழில் வாழ்கிறார் என்றும் நினைவில் வாழ்ந்து கொண்டே இருப்பார். அவருடைய ஆத்மா கிறிஸ்துவில் இன்பம் துய்த்து மகிழ்வதாக.

அவருடைய நினைவாகநாளை காலை எமது கல்லூரியில் இவரின் திரு உருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது.

அருட்திரு
— மைக்கல்யோசவ்
அதிபர்
சம்பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## விளையாட்டுச் செய்திகள்

அகில இந்திய 'சதார் மோகன் சிங்' விருதுகளுக்கான ஹாக்கி போட்டியில் கலந்து கொள்வதற்காக கொழும்பு நாலந்தா கல்லூரி ஹொக்கி குழுவினர் இந்தியா செல்லவுள்ளனர். இந்தியாவில் 136 பாடசாலைகள் இப்போட்டியில் பங்குபற்றுகின்றன. இப்போட்டி அக்டோபர் 4ம் திகதி முதல் 19ம் திகதி வரை நடைபெற உள்ளது.

### தாய்லாந்தில்

1981ம் ஆண்டுக்கான ஆசிய டெனிஸ் சாம்பியனுக்கான போட்டிகள் அக்டோபர் 14ம் திகதி முதல் 18ம் திகதி வரை தாய்லாந்தில் நடைபெறவுள்ளது. ஜப்பான், தென்கொரியா, தாய்வான், பிலிப்பைன்ஸ், நேபாளம், பாகிஸ்தான், இந்தியா, மலேஷியா, இந்தோனேஷியா சிங்கப்பூர், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுடன் இலங்கையும் இப்போட்டியில் கலந்துகொள்கிறது.

### இலங்கையர் பெருமை

இலங்கைக் கிரிக்கெட் குழுவின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளரான தயா சபேந்து கடந்தவாரம் நடைபெற்ற 'சராவிருதுக்கான' கிரிக்கட் போட்டியில் 52 ஓட்டங்களுக்கு 5விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன் முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் 900 விக்கெட்டுகளுக்குமேல் வீழ்த்திய பெருமையைப் பெற்றுள்ளார்.

### முதல்தடவை

ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் 1981-82க்கான கிழக்கு பிராந்தியத்திற்கான 'டேவிஸ் கோப்பை' டெனிஸ் பந்தயத்தில் இலங்கை இம்முறை கலந்து கொள்ளவுள்ளது. இதற்கான இலங்கைக் கோஷ்டி கலந்து கொள்ளும் முதற்போட்டி அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறவுள்ளது.

### விழிப்புலன் இழந்தோர் கிரிக்கெட்

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த விழிப்புலன் இழந்தோர் கிரிக்கெட் குழுவொன்று டிசம்பர் மாதமளவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. இவர்களின் விஜயத்தின்போது இரத்மலானை பார்வையற்றோர் பாடசாலை மாணவர்களுக்கு கிரிக்கெட் பயிற்சியினை அளிக்கவுள்ளனர்.

— இரத்தினம்.

## இன்றைய கூட்டத்தில் புதிய உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை மன்றப் பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் நகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த புதிய மாநகரசபை உறுப்பினர் ஷ ஹூக் ஹமீட் கலந்துகொள்வார்.

புதிய துணை முதல்வர் திரு எஸ். எஸ். அலோசியஸ் பணி புரிவார்.

இவர்களது நியமனங்கள் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் மாநகரசபையைச் சேர்ந்த அதிகாரிகள் ஊழியர்களுக்குச் சுற்றுநிருபமும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (நா)

## காங்கேசனில் ஜிப்சம் இறக்குமதி

(யாழ்ப்பாணம்)

905 தொன் ஜிப்சம் 24 மணி நேரத்தில் காங்கேசன்துறைத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்குத் தூத்துக்குடியிலிருந்து "டனிலா" என்ற கப்பல் சென்றவாரம் 905 டன் ஜிப்சம் ஏற்றிக் கொண்டுவந்திருந்தது.

அடுத்தமாதம் 3-ம் திகதி "அலெக்ஸா" என்ற கப்பல் 930 டன் ஜிப்சம் ஏற்றிக் கொண்டுவரவுள்ளது. (மா-அ)

## மருதமடுக் குளம் புனரமைப்பு

(புளியங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மருதமடுக்குளத்தைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூரிடம் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து மாவட்ட அமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் திரு. எஸ். செல்வரத்தினம் தலைமையில் சென்ற நீர்ப்பாசனதிணைக்கள உயர் அதிகாரிகள் குழு இக்குளத்தைப் புனரமைப்பதன் மூலம் சுமார் ஐந்நூறு ஏக்கர் காணிக்கு நீர்ப்பாசனம் செய்ய முடியுமென மாவட்ட அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மேலும் இப்புனரமைப்பு வேலைகள் அடுத்தமாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படலாமெனத் தெரிய வருகிறது.

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு கேணியடி கண்ணகை சனசமூக நிலைய நடப்பாண்டு நிர்வாகிகள் வருமாறு:- தலைவர்:- ஐ. நடராசா, செயலாளர்:- த. இரத்தினேஸ்வரன், பொருளாளர்:- க. முருகையா, உப தலைவர்:- இ. சோதிலிங்கம், உப செயலாளர்: இ. ஜெகதீஸ்வரன். இவர்களுடன் எட்டுப் பேர்கொண்ட நிர்வாகக் குழுவும்தெரிவுசெய்யப்பட்டது.

## அ. இலங்கைப் போட்டியில் பங்குபற்றும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடை பெற்ற நடனம், நாடகம், சங்கீத கலை நிகழ்ச்சிகளில் மத்திய பிரிவுக்கான பாரம்பரிய பண்ணிசை நிகழ்ச்சியில் யாழ். நாவலர் காக்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை முதலாம் இடத்தைப் பெற்றது.

இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றதன் மூலம் இப்பாடசாலை அகில இலங்கை ரீதியில் நடைபெறவிருக்கும் போட்டியில் பங்கு பெறத் தகுதி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

## குருளைச் சாரணர் விழா கொண்டாட முடிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் உதவி மாவட்ட ஆணையாளர் திரு. வி. ரி. நடராசா தலைமையில் கூடிய பல்வேறு பாடசாலைகளின் சாரண ஆசிரியர்கள் அக்டோபர் 24-ம்திகதி குருளைச் சாரண விழா கொண்டாடுவதென தீர்மானித்துள்ளனர். குருளைச் சாரணர்களைச் சேர்க்கும் குழுவுக்குப் பரிசு வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

### தாக்குதல் சம்பவம்:

# சந்தேக நபர்கள் பிணையில் சென்றனர்

(மாவிட்டபுரம்)

வீட்டினுள் புகுந்து அண்ணனையும், தம்பியையும் பயங்கரமாகத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நால்வர் கைதாகி பிணையில் விடப்பட்டுள்ளனர்.

சங்கானை கிழக்கைச் சேர்ந்த சின்னத்துரை தம்பையா, சின்னத்துரை தங்கத்துரை ஆகிய இரு சகோதரர்களும் வீட்டிலிருந்த சமயம் பொல்லு, வாள், கம்பி சகிதம் வந்த கோஷ்டியொன்று அவர்களைத் தாக்கியதாம்.

தம்பையா என்பவர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து சங்கானைப் பொலிசார் விசாரணை செய்து சந்தேகத்தின் பேரில் தம்பு நவரத்தினம், தம்பு துரைராஜா, இரத்தினம் கந்தசாமி, தம்பு கந்தசாமி ஆகிய நால்வரை கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

பதில் நீதிபதி திரு ரி. தம்பிரத்தினம் இவர்களை தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து விசாரணையை இம்மாதம் 29ம் திகதிக்கு ஒத்திவைத்தார். [க

# ஆயுதமுனையில் திருட்டு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க மிருசுவில் கிளைக்காவலாளியை ஆயுதமுனையில் பயமுறுத்திய கொள்ளைக் கோஷ்டி கதவை உடைத்துச் பொருட்களை கொள்ளையடித்து சென்றுள்ளது.

இக்களவு தொடர்பாக பொதுமுகாமையாளர் திரு. வே. கபிலாயபிள்ளையும் தலைவர் திரு. ப. யோசேப்பும் சாவகச்சேரிப் பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். இது சம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை.

# தடைசெய்யப்படலாம்

(கொழும்பு)

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் பொருட்டு தெரு ஓரங்களில் நடைபெறும் நடன்த்தை அரசு தடைசெய்யவுள்ளது.

உல்லாசப்பயணிகள் இந்நடனங்களை, இலங்கையின் தேசிய நடனங்கள் என்று நினைப்பதால் இதனைத் தடைசெய்ய கலாச்சார அமைச்சு அரசுக்கு ஆலோசனை வழங்கவுள்ளது. [கு]

# மரண அறிவித்தல்

## முத்துக்குமாரு பொன்னம்மா

வண்ணார்பண்ணை கோணந்தோட்டத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. முத்துக்குமாருவின் அன்பு மனைவி பொன்னம்மா நேற்று இறைவனடி எய்தினார். இவர் பாலசிங்கம், மகாலெட்சுமி, மனோன்மணி, பூமணி, புனிதவதி ஆகியோரின் தாயாரும் இராசலெட்சுமி, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, அப்புத்துரை, காலஞ்சென்ற கோபாலசாமி, கோபாலசாமி ஆகியோரின் அன்பு மாமியாரும், டாக்டர் சரோஜா [அமெரிக்கா], இரதிதேவி, காலஞ்சென்ற டாக்டர் சுஜீதா, டாக்டர் இந்திராணி [அமெரிக்கா], விமலாதேவி [உதவி அரசாங்க அதிபர் பணிமனை, திருநெல்வேலி], பத்மநாபன் [அமெரிக்கா], ஸ்ரீரங்குலன், அருணா [லண்டன்], வனஜா, வதனா, சுகுணா டாக்டர் சந்திரா [ஓமான்], ரவீந்திரன் [சவூதிஅரேபியா], டாக்டர் சாரதா [லண்டன்], மகேந்திரன் [அமெரிக்கா], பாலேந்திரன், ரத்தினா [யாழ் பளாகம்], ரஞ்சனா [மேற்கு ஜேர்மனி], யோகேந்திரன் [அமெரிக்கா], பிறேமாவதி [மலேசியா], ஆன்மதேவன் [பிரான்ஸ்], சகாதேவன் [லண்டன்], சிறீதரன் [மலேசியா றெக்கோடிங் சேவிஸ்], விநாயகமூர்த்தி [விநாயகர் கூல் பார்], விக்கினேஸ்வரன், சரஸ்வதி, விமலா, சாரதா, முகுந்தன், தாட்ஷாயினி, மீனலோசனி, தயாபரி, மணிவண்ணன், ரேணுகா, துளசி, இளையராஜன் ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் (28-09-1981) திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து வில்லூன்றி மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மு. பாலசிங்கம். 1089

## வடபிராந்திய போக்குவரத்துச் சபை
## பஸ் வண்டிகளில் விளம்பரம்

வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ் வண்டிகளின் உள்ளும் புறமும், பிரதான பஸ்தரிப்பு நிலையங்கள் ஆகியவற்றிலும் விளம்பரம் செய்ய விரும்பும் வர்த்தக ஸ்தாபனங்கள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விபரங்களுக்கு:

க. தனபாலசிங்கம்,
பொதுசன உறவு நிலை உத்தியோகத்தர்,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை,
4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
என்ற விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி: 214, 215, 7851

எஸ். கனகரத்தினம்,
தலைவர்,
வட பிராந்திய போக்குவரத்துச் சபை,
யாழ்ப்பாணம்.

1027

### பிரயாணிகள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அகதிகளுக்கு தலைமன்னார் துறைமுகத்தொழிலாளர் கூட்டுறவுசங்கத்தினர் மன்னார் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ் தில்லை நடராசாவின் அனுமதியுடன் காலை உணவு வழங்கினர். தலைமன்னார் துறைமுக இ. தொ. க. கிளைத்தலைவர் திரு. மாரிமுத்தவும் உறுப்பினரும் வரவேற்றனர்.

தலைமன்னாரிலிருந்து கப்பல் மூலம் இந்தியாவுக்குச் செல்வோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. முதல்நாள் புறப்பட்ட கப்பலில் இடமில்லாததினால் 200 பேர் அடுத்த கப்பலை எதிர்நோக்கியிருந்தனர்.

பிரயாணிகள் அதிகரித்துள்ளதால் இன்று 28ம் திகதி விசேடசேவை நடாத்தப்படும் என்று கப்பல் காட்டப்] திரு. யோசப் பக்டாஜே தெரிவித்தார். [க

### பாரதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கட்டுரையினை பேராசிரியர் க. கைலாசபதி வாசிப்பார், ஆய்வரங்குக்கு வாசிக்கப்படவிருக்கும் கட்டுரைகள் அவற்றை எழுதும் ஆராய்ச்சியாளர் விவரம் வருமாறு.

''பாரதியும் - ஊற்றுக்களும் - ஓட்டங்களும் - பேராசிரியர் க. கைலாசபதி, ''பாரதிக்கு பிந்திய காலங்களில் மரபும் இலக்கிய ஆக்கத் தொழிற்பாடும்'' - திருமதி கலையரசி சின்னையா, ''தமிழில் யாப்பியல் நிலைகள் - பாரதிக்கு முன்னும் பின்னும்'' திரு. நா. சுப்பிரமணியம், ''உலகம், நாடு இனம்'' - பாரதியின் நிலைப்பாடுகள்'' திருமதி சித்திரலேகா மௌனகுரு, ''இலக்கிய ஆக்க சக்தியாகவும் ஆக்கத்திற்கான உந்துதல் சக்தியாகவும் தமிழ் இலக்கியத்தில் மதம் தொழிற்பட்டுள்ள முறைமை'' திருமதி யோகேஸ்வரி கணேசலிங்கம், ''பாரதியும் அவன் வாசக வட்டமும் பேராசிரியர் திரு கா. சிவத்தம்பி, ''பாரதிக்கு முன்னரும் பாரதி காலத்திலும் பாரதிக்குப் பின்னரும் அன்னியச் செல்வாக்குகள் தமிழில் உள்வாங்கப்பட்ட முறைமை'' - இ. முருகையன் ''பாரதியின் உரைநடை'' கலாநிதி ஆ. சண்முகதாஸ், ''பாரதியும் புதுக்கவிதையும்'' எம். ஏ. எம். நுஃமான், ''பாரதி தரிசனங்களும் தாக்கங்களும்'' - பேராசிரியர் க. கைலாசபதி.

### லயனல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தலைமையிலான விசாரணைக் குழு திரு. சுந்தரலிங்கத்திடம் சகல விபரங்களையும் நாளை பெற்றபின், யாழ்ப்பாணம் சென்று விசாரணை நடாத்தும். [மா]

## வலதுகுறைந்தோர் ஆண்டு

[புளியங்குளம்]

கல்வி அமைச்சு, சர்வதேச வலதுகுறைந்தோர் ஆண்டை முன்னிட்டு சகல பாடசாலைகளிலுமுள்ள வலதுகுறைந்த மாணவர்களுக்கு கல்வி வசதிகள் செய்து கொடுப்பதற்காக விபரங்களைத் திரட்டிவருகிறது. இம்மாணவர்களுக்கு 'யூனிசெப்' நிறுவனம் மூலமாக உதவிகள் கிடைக்கவிருக்கிறது.

## யாழ் மாவட்டசபை கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபையின் பொதுக்கூட்டம் நாளை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. [மா]

# இப்படியும் நடக்கிறது

பம்பலப்பிட்டியிலுள்ள அகதிகள் முகாமில் தஞ்சம்புகுந்திருக்கும் இந்திய வம்சாவழியினருக்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் அளித்துவரும் பேருதவிகள் பற்றி வெளியில் அதிகம் பேசாவிட்டாலும்; முகாமைவிட்டு தாயகம் புறப்படும்போது தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினருக்கு உள்ளப்பெருக்கோடு அவர்கள் நன்றிக்கடன் தெரிவிக்கும் பாங்கு.........! இதனை நேரில்தான் பார்த்து மனம் உருக வேண்டும்!

உடுத்த உடுப்போடு மட்டும், உறங்கப் பாய் கூட இல்லாமல் கண்ணீரும் கம்பலையுமாக வந்த அவர்களுக்கு சகல உதவிகளும் தாராளமாக வழங்கி இவர்களின் உடல் நலம் கவனிக்க ஒரு அரசாங்க டாக்டரையும் நியமித்து சேவையாற்றுவது பலருக்கு வியப்பாகத்தானிருக்கும்! இது மட்டுமா?

இம்முகாமில் நான்கு பிரசவம் நிகழ்ந்திருக்கின்றன. புதன்கிழமை கோவிலில், ஒரு திருமணத்தையும், தடல் புடலாக (எல்லாச் செலவுகளையும் பார்த்து) இக்கழகத்தினர் செய்து வைக்கின்றனர்!

ஊடுருவி

# 4000ஏக்கரில் மரமுந்திரிகை

(யாழ்ப்பாணம்)

வவனியா மாவட்டத்தில் மரமுந்திரிகை உற்பத்திச் செய்கையில் வவனியா மாவட்ட அபிவிருத்திசபை அக்கறை செலுத்தவுள்ளது. வவனியா நகரசபையும் இதில் அதிக கவனம் செலுத்திச் செயல்படவுள்ளது.

இலங்கை ஏற்றுமதி ஊக்குவிப்புச் சபைத்தலைவர் மரமுந்திரிகையில் ஊக்கம் கொண்டவர்களுக்கு வேண்டிய காணியும், பணஉதவியும் செய்வதாகத் தெரிவித்துள்ளாராம்.

மரமுந்திரிகை உற்பத்தி செய்வதற்கென வவனியாவில் 4 ஆயிரம் ஏக்கர் நிலம் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டு உற்பத்தி செய்யவிரும்புவோரிடமிருந்து விண்ணப்பமும் கோரப்பட்டிருந்தது.

இக்காணிகளில் முந்திரிகை உற்பத்தி மேற்கொள்ளப்படாததால், அரசாங்கம் அக்காணிகளை ரத்துச் செய்ய முடிவு எடுத்திருந்தது. இதனையறிந்த மரமுந்திரிகை உற்பத்தியாளர் சங்கம், வவனியா மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. எம். சிற்றம்பலத்துடன் தொடர்பு கொண்டதன் பேரில், அவர் அக்காணியை ரத்துச்செய்யாமலிருக்க மாவட்டசபை மூலம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மரமுந்திரிகைச் செய்கைக்கு ஒதுக்கப்பட்ட இந்த நாலாயிரம் ஏக்கரில் 500 ஏக்கர் நிலத்தில் மாத்திரம் முந்திரிகை உற்பத்தி இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்காணிகளைத் திருத்திச் செய்வதற்கு 500 ஏக்கரில் காணி பெற்றவர்களைக் கொண்ட ஒரு கம்பனியும் ஸ்தாபிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வவனியா நகரசபைத்தலைவர் திரு. ஐ. கேதீஸ்வரன் தலைமையில் மரமுந்திரிகை உற்பத்தி காணி நிலைமைபற்றியும் ஆராய்வதற்கென ஒரு ஆலோசனைக்கூட்டமொன்று கூட்டப்பட்டது.

# டபிள்யு. ஏ. இராசையா

இளைப்பாறிய ஸ்டேற்பாங்க் சிறுப்பர் டபிள்யு. ஏ. இராசையா காலமானார். அன்னார் வாலாம்பிகையின் அன்புக்கணவரும், யசோதராவின் அருமைத் தந்தையாரும், இளைப்பாறிய தொழிற்திணைக்கள உத்தியோகத்தரும் தற்போதைய தொழில் ஆலோசகருமாகிய அருளானந்தன் புவனேசனின் அன்பு மாமனாரும், ஊர்மிளா, சர்மிளா ஆகியோரின் பாட்டனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 27-9.81 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வில்லூன்றி மயானத்தில் நடைபெற்றது. 1088

# மரண அறிவித்தல்

## நா. கந்தையா

மாவிட்டபுரம் [புதுவளவு] தெல்லிப்பளையைச் சேர்ந்த முன்னாள் அரச கட்டிட ஒப்பந்தகாரரும், சமூக சேவையாளருமாகிய ஸ்ரீமான் நாகமுத்து கந்தையா 26-9-81 சனிக்கிழமை சிவபதமடைந்துள்ளார் அன்னார் குணவதியின் அன்புக் கணவரும் திருமதி இரத்தினேஸ்வரி கந்தசாமி, பாலசுந்தரம், நைஜீரியா, சுவாமிநாதன், கட்டிடத் திணைக்களம், யாழ்ப்பாணம், பாலகிருஷ்ணன், கட்டிடத் திணைக்களம், கொழும்பு ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி, விமலாதேவி, தர்மராணி, குகதாசன், நில அளவையாளர், சம்மாந்துறை ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு சின்னையா, இளைப்பாறிய பொறியியலாளர், கொழும்பு, காலஞ்சென்ற திருமதி சிவபாக்கியம் கனகரத்தினம், நல்லையா, தருமலிங்கம், கட்டிட ஒப்பந்தகாரர், சிவகுரு, ஓய்வு பெற்ற ஓவசியர் ஆகியோரின் மூத்த சகோதரனுமாவர். அன்னாரின் பூதவுடல் 28-9-81 திங்கட்கிழமை இரண்டு மணியளவில் மாவிட்டபுரம் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். உறவினர்கள் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

1087 வ. கனகரத்தினம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஸ்ரீ செப்டம்பர் 28-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a Newspaper The General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.